SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் மாசி 18 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ரமலான் 1
மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

/maalaiexpressnews
● புதுச்சேரி ● ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 2, 2025 RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 226 ● 8 பக்கம் ● ரூ.6

## தமிழகம், புதுவையில்

# பிளஸ்2 பொதுத்தேர்வு நாளை தொடங்குகிறது

## தயார்நிலையில் தேர்வு மையங்கள்

**சென்னை, மார்ச் 2-**

தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் 10ம் வகுப்பு, பிளஸ்1, பிளஸ்2 ஆகிய வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. 2024-25 கல்வி ஆண்டுக்கான பிளஸ்2 பொதுத் தேர்வு நாளை (மார்ச் 3) தொடங்கி 25ம் தேதி வரை நடைபெற உள்ளது.

இந்த தேர்வை 3 லட்சத்து 78 ஆயிரத்து 545 பள்ளி மாணவர்கள், 4 லட்சத்து 24 ஆயிரத்து 23 பள்ளி மாணவிகள், 18 ஆயிரத்து 344 தனித்தேர்வர்கள், 145 சிறைவாசிகள் என மொத்தம் 8 லட்சத்து 21 ஆயிரத்து 57 பேர் எழுத இருக்கின்றனர். இந்த தேர்வை மாணவ, மாணவிகள் எழுதுவதற்கு ஏதுவாக 3 ஆயிரத்து 316 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்வை கண்காணிக்க ஒவ்வொரு நாளும் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், தேர்வு முறைகேடுகளை தடுக்க 4 ஆயிரத்து 800க்கும் மேற்பட்ட பறக்கும் படைகள் தேர்வுப் பணியில் ஈடுபட உள்ளனர்.

தேர்வு நடைபெற உள்ள பள்ளிகளில் தேர்வுக்கான அனைத்து முன்னேற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதை அரசு தேர்வுத்துறை உறுதி செய்து இருக்கிறது.

பொதுத்தேர்வு நடைபெறும் நாட்களில் தடையின்றி மின்சாரம் வழங்கிட மின்சாரத்துறைக்கும், தேர்வு பணிகளுக்கு பாதுகாப்பு வழங்கிட காவல் துறைக்கும், தேர்வு மையங்களின் போதுமான அடிப்படை வசதிகளை செய்துதர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டு இருப்பதாகவும், மாணவர்கள், தேர்வர்கள், பொதுமக்கள் தங்கள் புகார்கள், கருத்துகள், சந்தேகங்களை தெரிவித்து பயன்பெற வசதியாக முழு நேர தேர்வு கட்டுப்பாட்டு அறை (9498383075, 9498383076) காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்பட உள்ளதாகவும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.



மேலும் தேர்வு மைய வளாகத்துக்குள் செல்போன் எடுத்து வருவதற்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. ஆசிரியர்களுக்கும் தேர்வறையில் பயன்படுத்த தடை உள்ளது. இதனை மீறும் தேர்வர்கள், ஆசிரியர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருக்கிறது.

விடைத்தாள்களில் தேர்வு எண், பெயர், சிறப்பு குறியீடுகள் ஆகியவற்றை குறிப்பிடக்கூடாது. மாணவரின் புகைப்படம், பதிவெண், பாடம் உள்ளிட்ட விவரங்கள் கொண்ட முகப்புத்தாள், முதன்மை விடைத்தாளுடன் இணைத்து வழங்கப்படும். அதை சரிபார்த்து மாணவர்கள் கையொப்பமிட்டால் போதும். அறை கண்காணிப்பாளரே விடைத்தாள்களை பிரித்து வைக்க வேண்டும்.

தேர்வு நேரங்களில் தேர்வர்கள் ஒழுங்கீன செயல்களில் ஈடுபட்டால் குற்றங்களுக்கு தக்கவாறு தண்டனைகள் வழங்கப்படும். ஒழுங்கீன செயல்களுக்கு உடந்தையாகவோ, ஊக்கப்படுத்தவோ பள்ளி நிர்வாகம் முயன்றால் பள்ளி அங்கீகாரத்தினை ரத்து செய்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்வு குறித்த சந்தேகங்கள், புகார்களை தெரிவிக்க, பள்ளிக்கல்வி துறையின் '14417' என்ற இலவச உதவி மையத்தை தொடர்பு கொள்ளலாம் என்று தேர்வு துறை தெரிவித்துள்ளது.

இதேபோல் புதுச்சேரி மாநிலத்திலும் நாளை பிளஸ்2 தேர்வு நடைபெறுகிறது.

## ராமநாதபுரம்: போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களுடன், கவர்னர் ஆர்.என்.ரவி சந்திப்பு

**ராமநாதபுரம், மார்ச் 2-**

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை உடனே விடுவிக்க வலியுறுத்தி ராமேசுவரம் தங்கச்சிமடத்தில் நேற்று முன்தினம் மீனவர்கள் உண்ணாவிரதத்தை தொடங்கினர். இரவு வரையிலும் இந்த போராட்டம் நீடித்தது. அதன் பின்னர் உண்ணாவிரத போராட்டத்தை கைவிட்டு காத்திருப்பு போராட்டத்தை மீனவர்கள் தொடங்கினர்.

நேற்று 2வது நாளாக மீனவர்கள் காத்திருப்பு போராட்டம் நடந்தது. மீனவர் சங்க பிரதிநிதிகள் தேவதாஸ் சேசுராஜா, எமரிட், சகாயம் மற்றும் ராமேசுவரம், பாம்பன், தங்கச்சிமடம் உள்பட ராமநாதபுரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான மீனவர்கள் கலந்துகொண்டனர்.



அப்போது, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படை பிரச்சினை இல்லாமல் மீன்பிடிப்பதை உறுதி செய்ய வேண்டும், மீனவர்களுக்கு அபராதம் விதித்து இலங்கை சிறையில் அடைக்கும் மனித உரிமை மீறலுக்கு எதிரான அந்நாட்டு சட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும், தமிழக மீனவர்களை விடுவிக்கவும், இலங்கை வசம் உள்ள படகுகளை மீட்கவும் மத்தியமாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்நிலையில் இலங்கை கடற்படையை கண்டித்து ராமேஸ்வரம் தங்கச்சிமடத்தில் மீனவர்கள் 3ஆவது நாளாக இன்றும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சூழலில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க ராமநாதபுரம் சென்றுள்ள கவர்னர் ஆர்.என்.ரவி, போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களை சந்தித்தார். அப்போது இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள், படகுகளை விடுவிக்க கவர்னரிடம் மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மீனவர்கள் போராட்டத்தால், ராமேசுவரத்தில் இருந்து இன்று 7வது நாளாக மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. 700க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் துறைமுக கடல் பகுதியில் அணிவகுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

## உக்ரைனுக்கு ராணுவ உதவிகளை நிறுத்த அமெரிக்கா அதிரடி முடிவு

**வாஷிங்டன், மார்ச் 2-**

ரஷியாஉக்ரைன் இடையேயான போர் 3 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷியா போர் தொடுத்தது.

போரில் உக்ரைனுக்கு ஆதரவாக இருந்து வந்த அமெரிக்கா ஆயுதங்கள், ராணுவ உதவிகளை செய்து வந்தது. அதேபோல் உக்ரைனுக்கு மேற்கத்திய நாடுகளும் ஆதரவு அளித்தன. இதற்கிடையே அமெரிக்க அதிபராக பதவியேற்ற டிரம்ப், உக்ரைன் ஆதரவு நிலைப்பாட்டில் இருந்து விலகினார். ரஷியாவுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக ரஷிய அதிபர் புதின், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஆகியோருடன் தொலைபேசியில் பேசினார். இந்த விவகாரத்தில் டிரம்ப்ஜெலன்ஸ்கி இடையே வார்த்தை மோதல் ஏற்பட்டது.

இதற்கிடையே டிரம்ப்ஜெலன்ஸ்கி நேருக்கு நேர் வாக்குவாதத்தில் ஈடுபட்டது உலகளவில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. உக்ரைனில் உள்ள அரிய வகை கனிமங்களை அமெரிக்கா எடுத்து கொள்வது தொடர்பாக ஒப்பந்தத்தில் கையெழுத்திட உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அமெரிக்காவுக்கு சென்றார். அப்போது வெள்ளை மாளிகையில் நடந்த சந்திப்பில் டிரம்ப் ஜெலன்ஸ்கி இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அமெரிக்க துணை அதிபர் வான்ஸ் கேட்ட கேள்வியால் அதிருப்தி அடைந்த ஜெலன்ஸ்கி தனது கருத்தை தெரிவித்தபோது டிரம்ப் குறுக்கிட்டு அவரை கண்டித்தார். மேலும் வான்சும் கண்டிக்கும் வகையில் பேசினார்.

ரஷியாவுடன் போர் நிறுத்தத்தை டிரம்ப்

2-ம் பக்கம் பார்க்க

## கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தற்காலிகமாக தமிழ் ஆசிரியர்களை நியமிக்க முடிவு

**சென்னை, மார்ச் 2-**

தமிழகத்தில் மும்மொழி கொள்கை தேவையில்லை என இந்தி திணிப்புக்கு எதிராக தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன. இதற்கிடையே தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இயங்கி வரும் மத்திய அரசின் 34 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் ஒரு தமிழ் ஆசிரியர் கூட இல்லை என தி.மு.க. எம்.எல்.ஏ. எழிலன் பரபரப்பு குற்றச்சாட்டினை முன்வைத்தார்.

ஆர்.டி.ஐ. மூலம் பெறப்பட்ட இந்த தகவல் மூலம், தமிழக மாணவர்கள் பயிலும் பள்ளிகளில், தாய்மொழி தமிழை கற்றுக்கொடுக்க ஒரு ஆசிரியர் கூட அந்த பள்ளிகளில் இல்லை. அதேவேளையில், மிகவும் சொற்பமான நபர்கள் மட்டுமே பேசுவதாக ஆய்வறிக்கைகள் கூறும் சமஸ்கிருதம் மொழியை பயிற்றுவிக்க 15 ஆசிரியர்களும், இந்தி மொழியை பயிற்றுவிக்க 52 ஆசிரியர்களும் கேந்திரியா வித்யாலயா பள்ளிகளில் இருப்பது உறுதியானது. இது மத்திய அரசின் இந்தி திணிப்புக்கு ஒரு உதாரணம் என தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் குற்றம் சாட்டி இருந்தன.

இந்த சூழலில், கடந்த சில நாட்களுக்கு முன்பு திருவாரூரில் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளியில் பகுதி நேர ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களை ஒப்பந்த முறையில் தேர்வு செய்ய அறிவிப்பு வெளியானது. அதன்படி தமிழ் உட்பட பல்வேறு பாடங்களுக்கும், பயிற்சியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பதவிகளுக்கு கடந்த மாதம் 24ம் தேதி நேரடி நேர்காணல் நடத்தப்பட்டது

இந்நிலையில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கேந்தரியா வித்யாலயா பள்ளி மற்றும் இலுப்பைக்குடியில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் தமிழ் ஆசிரியர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க இன்றைய செய்தித்தாளில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

## என்னுடைய கண்ணீர் சீமானை சும்மா விடாது: நடிகை விஜயலட்சுமி சாபம்

**சென்னை, மார்ச் 2-**

நடிகை விஜயலட்சுமி பாலியல் வழக்கு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய சீமான், பெண் என்றும் பாராமல் படு ஆபாசமாக பேசினார். சீமான் பேசியதில் பல வார்த்தைகளை ஊடகங்கள் மியூட் செய்து ஒளிப்பரப்பும் அளவுக்கு அவரது பேச்சு இருந்தது. சீமானின் பேச்சுக்கு பல்வேறு அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இதேபோல் பெண் அரசியல் பிரமுகர்களும் கண்டனம் தெரிவித்தனர்.

இன்று காலை சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த சீமான்,என்னை பாலியல் குற்றவாளி என நீங்கள் எப்படிக் கூறுவீர்கள்? குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதா? விசாரணை நடைபெற்றுவரும்போது குற்றவாளி என எப்படி முடிவு செய்வீர்கள் நீங்கள் நீதிபதியாக என கேள்வி எழுப்பி இருந்தார்.

இந்தநிலையில், என்னுடைய கண்ணீர் சும்மா விடாது. சீமான் இனி நன்றாக இருக்க மாட்டார். இனி நிம்மதியாக சீமான் இருக்கமுடியாது. என்னுடைய கண்ணீர் என்ன செய்யப்போகிறது என்று பார் என்று வீடியோ ஒன்றை சமூக வலைதளங்களில் நடிகை விஜயலட்சுமி வெளியிட்டுள்ளார். பாலியல் தொழிலாளி என சீமான் விமர்சனம் செய்த நிலையில் நடிகை கண்ணீருடன் நடிகை விஜயலட்சுமி சாபம் விட்டுள்ளார்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● ஞாயிறு ● மார்ச் 2, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

### புதிய மருத்துவ முறையை பயன்படுத்தி

# இதயத்தை தற்காலிகமாக நிறுத்தி மூளையில் அரிய அறுவை சிகிச்சை

## நறுவீ மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை



வேலூர், மார்ச் 2-

அதிக ரத்த அழுத்தத்தின் காரணமாக மூளையில் உள்ள ரத்த குழாயில் வெடிப்பு ஏற்பட்டு உயிருக்கு போராடிய ஆந்திர மாநிலம் குப்பத்தை சேர்ந்த 55 வயது நபரை நறுவீ மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட புதிய மருத்துவ முறையை பயன்படுத்தி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் 8 மணி நேரம் அறுவை சிகிச்சை செய்து வெற்றிகரமாக அவரை காப்பாற்றினர்.

இதுசம்மந்தமாக நறுவீ மருத்துவமனை தலைவர் முனைவர் ஜி.வி. சம்பத் மருத்துவமனையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது: ஆந்திர மாநிலம் குப்பம் பகுதியை சார்ந்த முரளி என்ற 55 வயதுடைய நோயாளி ஒருவர் மூளையில் ரத்த குழாய் வெடித்து வீக்கத்துடன் சுய நினைவு இல்லாமல் உயிருக்கு போராடிய நிலையில் சிகிச்சைக்காக இங்கு அனுமதிக்கப்பட்டார். அவரை மருத்துவர்கள் பரிசோதனை செய்தபோது அவரக்கு மூளையின் இடது புற ரத்த குழாயில் வெடிப்பு ஏற்பட்டு உள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மூளையில் அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்யப்பட்டது. மருத்துவமனை மூளை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பால் ஹென்றி தலைமையில் மருத்துவர்கள் டாக்டர் பூபேஷ் புகழேந்தி, டாக்டர் சிவகுமார், இதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் விநாயக் சுக்லா தலைமையில், டாக்டர் ரே ஜார்ஜ், மயக்கவியல் நிபுணர்கள் டாக்டர் சரவணன், டாக்டர் ராஜசேகர் கொண்ட குழுவினர் இணைந்து அறுவை சிகிச்சை பணியை தொடங்கினர்.

இந்த அறுவை சிகிச்சை செய்யும்போது மூளைக்கு ரத்தம் செல்லாமல் இருக்க இதய அறுவை சிகிச்சை மருத்துவர்கள் மூலம் இதயத்தை தற்காலிகமாக நிறுத்தி இயந்திரம் மூலம் செயல்பட வைத்து மூளைக்கு ரத்தம் செல்வது தடுக்கப்பட்டது. வழக்கமாக மனித இதயத்தின் வெப்ப நிலை 34 டிகிரி செல்சியஸ் கொண்டதாக இருக்கும். இதனை 18 டிகிரி செல்சியசாக குறைத்து முளையில் அறுவை சிகிச்சை செய்வதற்கு வசதியாக முளைக்கு செல்லும் ரத்த ஓட்டம் 20 நிமிடம் நிறுத்தப்பட்டது. பின்பு மூளையில் அறுவை சிகிச்சை மூலம் ரத்த குழாயில் ஏற்பட்ட வெடிப்பை சரி செய்தனர். பிறகு மீண்டும் இதயத்தை வழக்கமான வெப்ப நிலைக்கு கொண்டு வந்து அதனை மீண்டும் செயல்பட வைத்தனர்.

இந்த முறையான அறுவை சிகிச்சை மிகவும் கடினமானதும் மற்றும் அரியதுமான ஒன்று. நாட்டிலேயே முதன் முறையாக இப்படிப்பட்ட அறுவை சிகிச்சை நடந்துள்ளது. இதன் மூலம் இம்மருத்துவமனை சாதனை படைத்துள்ளது. இந்த அறுவை சிகிச்சை மூலம் குணமடைந்த நோயாளி முரளி கூறுகையில், எனக்கு தலையில் பாதிப்பு ஏற்பட்டவுடன் நான் சுய நினைவை இழந்தேன். எனது குடும்பத்தினர் என்னை குப்பம் பகுதியிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அந்த மருத்துவமனையில் என் நிலைமை மோசமாக உள்ளதாகவும் உடனே வேலூர் நறுவீ மருத்துவமனைக்கு செல்லும்படி கூறியதால் நான் இங்கு வந்து சிகிச்சை சேர்ந்தேன். அதை தொடர்ந்து இம்மருத்துவமனை மருத்துவர்கள் எனக்கு சிறப்பான முறையில் சிகிச்சை அளித்து என் உயிரை காப்பாற்றினர். இப்போது நான் முழு உடல் நலம் பெற்று எனது அலுவலகப் பணியை சிறப்பாக செய்து வருகிறேன் என்றார்.

இந்த அரிய வகை அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து நோயாளின் உயிரை காப்பாற்றிய மருத்துவ குழுவினரை மருத்துவமனை நிர்வாகத்தின் சார்பில் அதன் தலைவர் முனைவர் ஜி.வி. சம்பத் பாராட்டினார். இந்நிகழ்வில் நறுவீ மருத்துவமனை மருத்துவ சேவைகள் தலைவர் டாக்டர் அரவிந்தன் நாயர், மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் ஜேக்கப் ஜோஸ் மற்றும் நோயாளியின் குடும்பத்தினர் உடன் இருந்தனர்.

# லத்தேரியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா



வேலூர், மார்ச் 2-

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் வட்டம் லத்தேரியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 72வது பிறந்தநாள் விழா விமர்சையாக கொண்டாடப்பட்டது.

கே.வி.குப்பம் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் ஆர்.முருகேசன் தலைமையில் பொதுமக்களுக்கு வேட்டி, சேலைகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் ஒன்றிய அவைத்தலைவர் எல். நாராயணன் கே.வி.குப்பம் ஊராட்சி ஒன்றிய துணை சேர்மன் பாரதி வெங்கடேசன், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜெயா முருகேசன், திவ்யா சிவகுமார், திமுக ஒன்றிய துணை செயலாளர் ஏ.எஸ்.அன்பழகன், அன்னங்குடி ஊராட்சி மன்ற தலைவர் கார்த்திக், கட்சி நிர்வாகிகள் பட்டாபி, கதிரவன், ரவி, விஜயன், மகளிரணி அமைப்பாளர் பாரதி விநாயகம், இளைஞர் அணி அமைப்பாளர் ஏவிஎம் பிரபு, மாணவர் அணி அமைப்பாளர்கள் சுரேஷ், ராஜேஷ், திலீபன், லோகநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## உக்ரைனுக்கு ராணுவ... (முதல் பக்க தொடர்ச்சி)

வலியுறுத்திய நிலையில் அதை ஜெலன்ஸ்கி ஏற்க மறுத்தார். இதையடுத்து இந்த சந்திப்பு பாதியில் முடித்துக் கொள்ளப்பட்டது. மேலும் கனிம ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டதால் வெள்ளை மாளிகையில் இருந்து ஜெலன்ஸ்கி வெளியேறினார்.

சர்வதேச ஊடகங்கள் மத்தியில் டிரம்ப் ஜெலன்ஸ்கி இடையே நடந்த வாக்குவாதம், போரின் திசையை மாற்றி விடும் சூழலை ஏற்படுத்தி இருக்கிறது. டிரம்புடனான மோதல் விவகாரத்தில் ஜெலன்ஸ்கிக்கு ஐரோப்பிய நாடுகள் ஆதரவு தெரிவித்து உள்ளன. ஆனால் ரஷியாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு அமெரிக்காவின் ஆதரவு மிகவும் முக்கியம் என்றே கருதப்படுகிறது.

இந்த நிலையில் உக்ரைனுக்கு அளிக்கப்பட்டு வரும் அனைத்து ராணுவ உதவிகளையும் நிறுத்த அதிபர் டிரம்ப் நிர்வாகம் ஆலோசனையில் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறும்போது, போரில் உக்ரைனுக்கு அனுப்பப்பட காத்திருக்கும் பில்லியன் கணக்கான டாலர் மதிப்பு உள்ள ரேடார்கள், வாகனங்கள், வெடிமருந்துகள் மற்றும் ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுத உதவிகள் விநியோகத்தை நிறுத்தும் முடிவு தொடர்பாக ஆலோசனை நடந்து வருகிறது என்றார். இந்த தகவலை வாஷிங்டன் போஸ்ட் ஊடகம் மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது. ஏற்கனவே டிரம்ப் அதிபராக பதவியேற்றதும் வெளிநாடுகளுக்கான நிதி உதவிகளை நிறுத்தவும் உத்தரவிட்டார். இதற்கிடையே உக்ரைனுக்கான அனைத்து ராணுவ உதவிகளையும் அமெரிக்கா நிறுத்தும் பட்சத்தில் அது போரில் உக்ரைனுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றே கருதப்படுகிறது. உக்ரைனுக்கு ஐரோப்பிய நாடுகள் உதவினாலும் அமெரிக்காவை போல் ஆயுதங்களை வழங்க முடியுமா? என்பதில் சந்தேகம் நிலவுகிறது.

இதற்கிடையே டிரம்ப்ஜெலன்ஸ்கி மோதல் விவகாரத்தில் நேட்டோ அமைப்பு சமரசத்தை ஏற்படுத்த முயற்சித்து உள்ளது. டிரம்புடன் மோதல் போக்கை கடைப்பிடிக்க வேண்டாம் என்று ஜெலன்ஸ்கியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டு போட்டி பரிசளிப்பு விழா



செஞ்சி, மார்ச் 2-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் எம்ஜிஆர் இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற விளையாட்டு போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு எம்ஜிஆர் இளைஞர் கோப்பை பரிசளிப்பு விழா மற்றும் ஜெயலலிதா 77வது பிறந்தநாள் விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் வி.ஆர். பிரித்திவிராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அதிமுக மாநிலங்களவை உறுப்பினரும், அதிமுக விழுப்புரம் மாவட்ட கழக செயலாளருமான சி.வி. சண்முகம் கலந்துகொண்டு எம்ஜிஆர் இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற கிரிக்கெட், பேட்மிட்டன், செஸ் உள்ளிட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசுகள் மற்றும் கேடயங்களை வழங்கி பாராட்டினார். மேலும் ஜெயலலிதா 77வது பிறந்தநாள் கொண்டாட்டமாக ஏராளமான பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைத் தலைவர் வி.ரங்கநாதன், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் கோவிந்தசாமி, செஞ்சி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சோழன், மேல்மலையனூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் புண்ணியமூர்த்தி, மேல்மலையனூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பாலகிருஷ்ணன், வல்லம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் விநாயகமூர்த்தி, வல்லம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் நடராஜன், அனந்தபுரம் பேரூர் கழக செயலாளர் சங்கர், மாவட்ட இணை செயலாளர் ஆனந்தி அண்ணாதுரை, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு பொருளாளர் அருண்தத்தன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் கோகுல்ராஜ், பொதுக் குழு உறுப்பினர்கள் மனோகரன், சுலோசனா ஜெயபால், செஞ்சி பேரூராட்சி கவுன்சிலர் அகல்யாவேலு உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சட்டமன்ற பேரவையின் பொது நிறுவனங்கள் குழு வருகை குறித்து ஆலோசனைக் கூட்டம்




கடலூர், மார்ச் 2-

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொது நிறுவனங்கள் குழு 2024–25 வருகை தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொது நிறுவனங்கள் குழு 2024–25 வருகை தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, சட்டமன்ற பேரவையின் பொது நிறுவனங்கள் குழு வருகின்ற 04.03.2025 அன்று கடலூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ள உள்ளனர். சட்டமன்ற பேரவையின் பொது நிறுவனங்கள் குழுத்தலைவர் நந்தகுமார் (அனைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர்) தலைமையில் உறுப்பினர்கள் எஸ்.காந்திராஜன் (வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர்). செல்வபெருந்தகை (ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர்), அன்பழகன் (கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர்), அசோகன் (சிவகாசி சட்டமன்ற உறுப்பினர்). எம்.எஸ்.எம். ஆனந்தன் (பல்லடம் ஈஸ்வரன் (திருச்செங்கோடு சட்டமன்ற சட்டமன்ற உடுமலை கே.ராதாகிருஷ்ணன் (உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர்). கடம்பூர் ராஜீ (கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர்). கிரி (செங்கம் சட்டமன்ற உறுப்பினர்) கோவிந்தசாமி (பாப்பாரெட்டிபட்டி) சந்திரசேகரன் (பொன்னேரி சட்டமன்ற சட்டமன்ற உறுப்பினர்) சிந்தனை செல்வன் (காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர்). நாகைமாலி (கீழ்வேலூர் ஒய்.பிரகாஷ் (ஒசூர் சி. விஜயபாஸ்கர் (விராலிமலை வேலு (மயிலாப்பூர் சட்டமன்ற சட்டமன்ற சட்டமன்ற உறுப்பினர்). சட்டமன்ற உறுப்பினர்). முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர்) ஆகியோர் அடங்கிய குழுவினர் வருகை தர உள்ளனர்.

இக்குழுக்கூட்டம் 04.03.2025 அன்று மாலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ளது. ஆய்வின்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக்கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு மீன்வள மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் போன்ற துறைகளின் செயல்பாடுகளில் குழுவினரால் ஆய்வு செய்யப்படவுள்ளது.

சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தங்கள் மேற்கொண்டிருக்கும் பணிகள் குறித்தும், முடிந்த, நிலுவையிலுள்ள பணிகள் குறித்த தரவுகளுடன் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும். தமிழ்நாடு சட்டமன்றக் குழு ஆய்வு பயணத்தின் போது பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட அலுவலர்கள் சிறப்பு கவனம் செலுத்தி பணியாற்றிட வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் சரண்யா, மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திருவேங்கிடம் உட்பட துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும்

# மக்களுக்கு பட்டா வழங்குவது குறித்து ஆட்சியர் கள ஆய்வு



திருவண்ணாமலை, மார்ச் 2-

திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட தேனிமலை, அண்ணா நகர் மற்றும் மாரியம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டார்கள்.

திருவண்ணாமலை மாநகராட்சிக்குட்பட்ட தேனிமலை, அண்ணா நகர் மற்றும் மாரியம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் 1706 குடும்பங்களில் தகுதியான நபர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கும் பொருட்டு கணக்கெடுக்கும் பணிகள் நடைபெற்றது. மேற்படி கணக்கெடுப்பு பணிகள் முடிவடைந்த நிலையில் இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டு தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு நில அளவை பணிகள் மேற்கொண்டு நடைமுறையில் உள்ள அரசாணையின்படி பொதுமக்களுக்கு விரைந்து பட்டா வழங்க அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் இராம்பிரதீபன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் (பொ) செந்தில்குமார். திருவண்ணாமலை வட்டாட்சியர் துரைராஜ் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# நாலேட்ஜ் பொறியியல் கல்லூரியில் 12வது பட்டமளிப்பு விழா




**சேலம், மார்ச் 2-**

நாலேட்ஜ் பொறியல் கல்லூரியின் 12வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நாலெட்ஜ் குழுமத்தின் அறக்கட்டளை செயலாளர் முனைவர் குமார் தலைமை தாங்கி நடத்தினார். சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் இயக்குனர் ராஜராஜன் மற்றும் கூப்பர் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆனந்த் மோகன்ராம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கு பெற்று மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் சுமார் 750 பொறியியல் மற்றும் மேலாண்மை துறை மாணவர்களுக்கு இளங்கலை மற்றும் முதுகலை பட்டங்கள் வழங்கப்பட்டது. வகுப்பில் முதல் மூன்று இடங்களை பிடித்த 29 மாணவர்களுக்கும் பதக்கங்களை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் நாலேட்ஜ் பொறியியல் கல்லூரி அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் கல்லூரியின் செயல் தலைவருமான முனைவர் சீனிவாசன் பேசுகையில், பொறியாளர்கள் தங்களது பணியில் சமூகப் பொறுப்புடன் மற்றும் நெறிமுறைகளுடன் செயல்பட வேண்டும் என்று எடுத்துரைத்தார். நாலெட்ஜ் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் விசாகவேல் அறக்கட்டளையின் பொருளாளர் சுரேஷ்குமார், இயக்குனர்கள் துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# அறிவியல் கண்காட்சியில் திருவேட்டக்குடி அரசு பள்ளி மாணவர்கள் சாதனை




**புதுச்சேரி, மார்ச் 2-**

காரைக்கால் திருவேட்டக்குடியில் அமைந்துள்ள தேசிய தொழில்நுட்ப கழகம் கல்லூரியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் திருவேட்டக்குடி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவன் நடுநிலைப் பள்ளி அளவில் தனிப்பிரிவில் அசன் இரண்டாம் இடத்தைப் பிடித்தார். மற்றும் உயர்நிலைப் பள்ளி அளவில் குழு பிரிவில் சங்கவி திவ்யதர்ஷினி இலக்கியா இரண்டாம் இடத்தை பிடித்தனர். இதில் தனியார் பள்ளிகளும் அரசு பள்ளிகளும் கலந்து கொண்டு 200க்கும் மேற்பட்ட அறிவியல் தொழில்நுட்ப பிரிவுகளில் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன. பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆண்டாள் மற்றும் வழிகாட்டு ஆசிரியர் ராஜு மாணவனை வெகுவாக பாராட்டினர்.

# உலக பிண்டர்ஸ் தினம் கொண்டாட்டம்



**புதுச்சேரி, மார்ச் 2-**

புதுச்சேரி மாஸ்டர் பிரிண்டர்ஸ் அசோசியேசன் சார்பில் அச்சு எழுத்து மற்றும் இயந்திரம் கண்டுபிடித்த ஜான் கூட்டன் பர்க் நினைவு தினத்தை முன்னிட்டு 24 பிப்ரவரி 2025 அன்று நமது சங்கத்தின் சார்பில் ஐந்தாம் ஆண்டு உலக பிண்டர்ஸ் தினம் கொண்டாடப்பட்டது. தலைவர் தலைமையில் ஜான் கூட்டன் பர்க் திரு உருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இத்தொழிலில் கூட்டு முயற்சி தொழில் வளர்ச்சிக்கும் நட்பு வளரவும் அடுத்த தலைமுறைக்கான தொழில்நுட்பத்தை அறிந்து கொண்டு நம்மை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டு கலந்துகொண்ட அனைவருக்கும் தலைவர் நன்றி பாராட்டி நிகழ்ச்சியை நிறைவு செய்தனர்.

# தேசிய வருவாய் வழி தேர்வு 16 மையங்களில் 3,460 பேர் எழுதினர்



**புதுச்சேரி, மார்ச் 2-**

புதுச்சேரியில் நடந்த தேசிய வருவாய் வழி தேர்வினை 95.08 சதவீதம் பேர் எழுதினர். மத்திய கல்வி அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, தேசிய வருவாய் வழி மற்றும் படிப்பு உதவித் தொகை தேர்வு புதுச்சேரியில் 16 மையங்களில் பள்ளி கல்வித்துறை சார்பில் நேற்று நடந்தது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் இதில் ஆர்வமாக கலந்துகொண்டு தேர்வு எழுதினர். இத்தேர்வினை விண்ணப்பித்திருந்த 3,639 பேரில் 3,460 பேர் அதாவது 95.08 சதவீத பேர் எழுதினர்.

புதுச்சேரியில் விண்ணப்பித்த 2,684 பேரில், 2,556 பேர் தேர்வினை எழுதினர். காரைக்கால் பிராந்தியத்தில் விண்ணப்பித்த 745 பேரில், 709 பேர் எழுதினர். மாகியில் விண்ணப்பித்த 87 பேரில், 79 பேரும், ஏனாமில் விண்ணப்பித்த 123 பேரில் 116 பேரும் எழுதினர்.

தேர்வு மையங்களை பள்ளி கல்வித்துறை இயக்குநர் பிரியதர்ஷினி, இணை இயக்குநர் சிவகாமி ஆகியோர் ஆய்வு செய்தனர். இந்த தேர்விற்கான கேள்வித்தாள் மற்றும் விடை குறிப்புகள் www.schooledn.py.gov.in என்ற இணையதளத்தில் நாளை 3ம் தேதி வெளியிடப்படும். விடைகளில் ஆட்சேபனை இருந்தால் 5ம் தேதிக்குள் nmmsnts@dsepdy.edu.in என்ற இமெயில் முகவரியில் தெரிவிக்கலாம்.

# புதுச்சேரியில் ஜூலை மாதம் உலக தமிழ் மாநாடு ஜனாதிபதி, பிரதமர் பங்கேற்க ஏற்பாடு



**புதுச்சேரி, மார்ச் 2-**

புதுச்சேரியில் உலகதமிழ் மாநாடு இந்த ஆண்டு ஜூலை இறுதி வாரத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் ஜனாதிபதி, பிரதமர் பங்கேற்க உள்ளனர். புதுச்சேரியில் உலக தமிழ் மாநாடு நடத்தப்படும் என, முதலமைச்சர் ரங்கசாமி சட்டசபையில் அறிவித்தார். அதனையொட்டி, மாநாட்டுக்கான முன்னேற்பாடுகளை கலை பண்பாட்டு துறை மேற்கொண்டது.

இந்நிலையில், ஜூலை மாத இறுதி வாரத்தில் 12வது உலகத் தமிழ் மாநாடு நடத்த புதுச்சேரி அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கான இந்தியாவின் கிளை நிர்வாகிகள் சட்டசபையில் முதலமைச்சர் ரங்கசாமியை நேற்று சந்தித்து ஆலோசனை நடத்தினர். அப்போது, சபாநாயகர் செல்வம், கவர்னரின் செயலர் மணிகண்டன், கலை பண்பாட்டுத் துறை செயலர் நெடுஞ்செழியன் உடன் இருந்தனர்.

உலக தமிழ் மாநாட்டில் ஜனாதிபதி, பிரதமர் மோடி ஆகியோர் பங்கேற்க உள்ளனர். மேலும், உலகம் முழுவதிலும் இருந்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள் கலந்துகொள்கின்றனர்.

# அனல்மின் திட்ட நிலைய பணிகளை இயக்குனர் ஆய்வு




தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், உடன்குடி மிக உய்ய அனல்மின் திட்ட நிலைய பணிகள் நடைபெற்று வருவதை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் மருத்துவர் ராதாகிருஷ்ணன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா



**தேனி, மார்ச் 2-**

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தொகுதிக்குட்பட்ட கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை, கண்டமனூர், ஆத்தங்கரைப்பட்டி, புதூர் ராமச்சந்திராபுரம், வருசநாடு, சிங்கராஜபுரம், பூசணியூத்து, நரியூத்து, தங்கம்மாள்புரம், குமணன்தொழு உள்ளிட்ட பகுதிகளில் திமுக தலைவர் முக ஸ்டாலின் 72வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் கடமலைக்குண்டு மயிலாடும்பாறை திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் வக்கீல் சுப்பிரமணி தலைமை தாங்கி கொடியேற்றி வைத்து சிறப்பித்து பேசினார்.

இதேபோல் கடமலைக்குண்டு மயிலாடும்பாறை வடக்கு ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி தலைமை தாங்கி சிறப்பித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினார். இந்த நிகழ்ச்சியின்போது திமுக கட்சி மாவட்டத் துணைச் செயலாளர் மலைச்சாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பிரபாகரன், ஊராட்சி கழக செயலாளர்கள் தென்னரசு, ஆனந்தன், மாவட்ட பிரதிநிதி குறிஞ்சி மாடசாமி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் மச்சக்காளை, உமாமகேஸ்வரி வேல்முருகன், பெருமாள், கருப்பையா, ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவக்குமார், வைகைசுப்பு, திமுக முக்கிய பிரமுகர்கள் கருணாநிதி, வெற்றிச்செல்வன், கர்ணன், முருகன் சோலைராஜா, வடிவேல், தொழில்நுட்ப பிரிவு பிரபு, மக்கள் நலப்பணியாளர் தமிழன், பால்பாண்டி, தங்கமலை, லோகந்துரை, ரவி உள்ளிட்ட ஏராளமான திமுக கிளை, ஒன்றிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# கடையம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் ஸ்டாலின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்



**கடையம், மார்ச் 2-**

கடையத்தில் தமிழ்நாடு முதல்வர் பிறந்தநாள் விழா ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார் ஆலோசனையின் பேரில் மாவட்ட துணைச் செயலாளர் தமிழ்ச்செல்வன் தலைமையில் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கே. மயிலவன் முன்னிலையில் இனிப்புகள், நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இதில் மாவட்ட ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் மேசியா ஜெயசிங், ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர் சுந்தரம், ரவணசமுத்திரம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் புகாரி மீரா ஷாகிப், மாவட்ட பிரதிநிதிகள் அய்யன்சாமி, பெருமாள், அறங்காவலர் குழு தலைவர் மூர்த்தி, அவைத் தலைவர் பக்கீர் மைதீன் துணைச்செயலாளர் வின்செண்ட், பொருளாளர் சுடலைமுத்து எல்–டி முருகன், கிளை செயலாளர் மருதப்பன், ஒன்றிய கவுன்சிலர் ஜஹாங்கீர், கிருஷ்ணன்,கோமு,ஆரோக்கியராஜ், தங்கராஜ், சௌந்தர்ராஜன், அழகியநம்பி, அர்ச்சுணன் செ.பி.குளம் சாஸ்தா உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# தென்காசி திமுக சுற்றுப்புற சூழல் அணி சார்பாக ஸ்டாலின் பிறந்தநாள் விழா



**கடையம், மார்ச் 2-**

தமிழக முதல்வர் முக ஸ்டாலின் பிறந்த தினத்தை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட சுற்று சூழல் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர் கடையம் சு.சந்திரசேகர் தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்களை துண்டறிக்கை மூலம் மக்களிடம் தெரிவித்தார். பொதுமக்களுக்கு முதலமைச்சரின் பிறந்த தின விழாவை முன்னிட்டு இனிப்பு வழங்கி கொண்டாடினார். இந்நிகழ்ச்சியில் கடையம் ஒன்றியம் ரவண சமுத்திரம் திராவிட முன்னேற்ற கழக கிளைச் செயலாளர் சங்கிலி பூதத்தான், முரட்டு பக்தன் சசிகுமார், ராஜாங்கபுரம் சிங்கக்குட்டி, கல்யாணபுரம் ராமராஜன், பாரதி நகர் சதீஷ்குமார், அரவிந், மிட்டாய் கடை மோகன், கல்யாணிபுரம் சுரேஷ் மற்றும் நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் கலந்துகொண்டனர்.


## தம்பதிகள் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் மேலும் 2 பேர் கைது

**காரைக்கால், மார்ச் 2-**

காரைக்காலில் சொந்த இடத்தை சுற்றி வேலி அமைத்தோரை தட்டி கேட்ட, தம்பதிகள் மீது தாக்குதல் நடத்திய வழக்கில், மேலும் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

காரைக்காலை அடுத்த கோட்டுச்சேரி குமரப் பிள்ளை வீதியில் வசிப்பவர் ரமேஷ் (48). இவரது மனைவி ஆலிஸ் மேரி (36). கடந்த பிப்ரவரி 15ம் தேதி, கணவன் மனைவி இருவரும், தங்களது சொந்த இடமான குயவன்குளத்து தெரு முக்கூட்டு ஆலமரம் பகுதிக்கு சென்ற பொழுது, அந்த இடத்தை சுற்றி 3 நபர்கள் வேலி அமைத்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது ரமேஷ் மற்றும் அவரது மனைவி ஆலிஸ் மேரி தங்களது இடத்தை சுற்றி ஏன் வேலி அமைக்கிறீர்கள் என கேட்டுள்ளனர். அதற்கு 3 நபர்களும் அப்படித்தான் வேலி அமைப்போம் என தகராறு செய்து, கணவன், மனைவியை அசிங்கமாக திட்டி தாக்கியுள்ளனர். இதில் காயம் அடைந்த அவர்கள் காரைக்கால் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று, கோட்டுச்சேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன் பெயரில், கோட்டுச்சேரி சப் இன்ஸ்பெக்டர் குமரன் மற்றும் போலீசார், காரைக்கால் மேல காசாக்குடி தென்பாதியை சேர்ந்த சந்திரன் (37), திரு.பட்டினம் வடக்கட்டளையைச் சேர்ந்த தாமோதரன் (36), அதே பகுதியை சேர்ந்த சோழ மணி (36) ஆகிய 3 பேர் மீது 3 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்தனர். இந்த வழக்கில், மேலும் இரண்டு பேர் மேற்குறிப்பிட்ட கணவன், மனைவியை ஆபாசமாக திட்டியதாக கூறப்படுகிறது. அன்றைய தினம் இருவர் குறித்து விரிவான தகவல் தெரியாததால், நேற்று முன்தினம் இருவர் மீதும் கோட்டுச்சேரி போலீசார் வழக்கு பதிவு செய்தனர். அதன்படி, காரைக்கால் அடுத்த விழுதியூர் பகுதியை சேர்ந்த விடுதலைக்கனல் (45) நெடுங்காடு பகுதியை சேர்ந்த லெனின் (44) ஆகிய இரண்டு பேரை நேற்று முன்தினம் கோட்டுச்சேரி போலீசார், கைது செய்து சிறையில் அடைத்தனர். கடைசியாக கைது செய்யப்பட்ட இருவரும் காரைக்கால் விடுதலை சிறுத்தை கட்சி நிர்வாகிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நியூ எவர்கிரீன் ஆங்கில பள்ளியில் அறிவியல் கண்காட்சி



**புதுச்சேரி, மார்ச் 2-**

புதுவை மாநிலம் மடுகரை பகுதியில் அமைந்துள்ள நியூ எவர்கிரீன் ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு மெகா அறிவியல் கண்காட்சி சிறப்பான முறையில் நடைப்பெற்றது.

சிறப்பு விருந்தினராக அய்யனார் தாசில்தார் (ஓய்வு), புதுச்சேரி அரசு ரிப்பன் வெட்டி தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். பள்ளியின் தாளாளர் ஹபீப் ரஹ்மான் தலைமை தாங்கினார்.

இதில் 250க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று புதுமையான கண்டுபிடிப்புகளை செய்து அசத்தி இருந்தனர். கண்காட்சிக்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர் மற்றும் பள்ளியின் தாளாளரிடம் பள்ளி மாணவர்கள் அவர்களின் படைப்புகளைப் பற்றி கலந்துரையாடினர். மேலும் விமிஜி கல்லூரியில் பயிலும் 15க்கும் மேற்பட்ட பொறியியல் மாணவர்களின் உதவியுடன் இந்நிகழ்ச்சி சிறப்பான முறையில் நடைபெற்றது.

அதனை பெற்றோர்கள், நண்பர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டு கண்டு களித்தனர். இதில் விண்கலத்தின் பயன்பாடுகள், தொழிற்சாலைகளின் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்வது சுற்றுச்சூழல் மாசுபாடு, விவசாயம், சூரிய குடும்பம், 3ஞி தொழில்நுட்பம், ரோபோடிக்ஸ், கணினி தொழில்நுட்பம், புள்ளியியல் சார்ந்த விளையாட்டு கணக்குகள், வணிகத் தொழில் நெறி, கணக்கு வைப்பு முறை சார்ந்த விளக்கங்கள், பண்டைய கால பயன்பாட்டு பொருட்கள், மின்னணு சார்ந்த விளக்க முறைகள், பண்டைய கால விளையாட்டு பொருட்களான தாயம், பம்பரம், பல்லாங்குழி, கல்லாங்காய் பார்வையாளர்களின் சிறுவயது விளையாட்டுகளை நினைவு கூறும் விதமாக அமைந்தது.

மேலும், மனித உடல் உறுப்புகளான இருதயம், சிறுநீரகம் மற்றும் நுரையீரல் ஆகியவற்றை உயிரோட்டமான இயக்கங்களை எடுத்துரைத்து பொதுமக்கள் மற்றும் பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தனர்.

இவற்றை நமது பள்ளியில் பயிலும் மழலையர்கள் முதல் ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் வரை அனைத்து மாணவர்களும் இணைந்து புதிய தொழில்நுட்பத்தின் உதவியுடன் புதுப்புது கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து அதனை பார்வையாளர்களுக்கு எடுத்துரைத்து மெகா அறிவியல் கண்காட்சியை பிரமாதப்படுத்தியிருந்தனர். இது மட்டுமல்லாமல் களிமண் சிற்பங்களும் இடம்பெற்று இருந்தன. இந்த அறிவியல் கண்காட்சியை பிரம்மிப்புட்டும் வகையில் வண்ண மீன்களின் கண்காட்சி அனைவரையும் கண் கவர செய்தது. அறிவியல் கண்காட்சியை பார்வையிட வந்த மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் வண்ண மீன்களை தங்கள் வீட்டிற்கும் மகிழ்ச்சியுடன் வாங்கி சென்றனர்.

இம்மெகா அறிவியல் கண்காட்சிகான அனைத்து ஏற்பாடுகளையும் நியூ எவர்கிரீன் ஆங்கில உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் சாதிக் அலி மற்றும் பொறுப்பாசிரியை வினோதினி, இருபால் ஆசிரியர்கள் மற்றும் பள்ளியில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உற்சாகத்தோடு சிறப்பாக செய்திருந்தனர்.

# முதல்வர் ஸ்டாலின் பிறந்த நாள் விழா





**தூத்துக்குடி, மார்ச் 2-**

கயத்தாறில் தமிழக முதல்வர் ஸ்டாலின் 72 வயது பிறந்த தினத்தை முன்னிட்டு கயத்தாறு பேரூராட்சி அலுவலகம் முன்பு பிறந்த நாள் விழாவை கேக் வெட்டி கொண்டாடினர். பின்னர் பொதுமக்களுக்கு தென்னங்கன்றுகளை பேரூராட்சி மன்றத் தலைவர் சுப்புலட்சுமி இராஜதுரை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு லட்டு வழங்கினார்கள். 72 பேருக்கு தென்னங்கன்றுகள் வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் கடம்பூர் பேரூராட்சி மன்ற தலைவர் நாகராஜா, தூத்துக்குடி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ராஜதுரை, தூத்துக்குடி வடக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பேட்டை லயன்ஸ் அ.மாரியப்பன், பேரூராட்சி மன்றத் கவுன்சிலர்கள் நயினார் பாண்டியன், செல்வகுமார், தேவி கண்ணன், ஆதிலட்சுமி அந்தோணி, தூத்துக்குடி, மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் பீர்மைதீன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் ஜெயசிங், அயலக அணி இஸ்மாயில், மகளிர் அணி செல்வி, இளைஞர் அணி சங்கர், தகவல் தொழில்நுட்ப பிரிவு கார்த்திக், முன்னாள் கவுன்சிலர்கள் சேக்தாவூது, சந்தானம், முன்னாள் நகர செயலாளர் இஸ்மாயில், மாவட்ட பிரதிநிதி பவுன்ராஜ், தெற்கு இலந்தைகுளம் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் செல்வி ரவிக்குமார், கயத்தாறு நகர பொருளாளர் ஜாமால், திமுக வார்டு செயலாளர் வடக்கு தெரு மாடசாமித்தேவர், மற்றும் கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கோவிந்தப்பேரி ஊராட்சியில் சிமெண்ட் சாலை திறப்பு



**தென்காசி, மார்ச் 2-**

தென்காசி மாவட்டம் கோவிந்த பேரி ஊராட்சி பள்ளிக்கூடத் தெருவில் சுமார் ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை திறப்பு விழா நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் டி கே பாண்டியன் தலைமையில் கடையம் ஊராட்சி ஒன்றிய சேர்மன் செல்லம்மாள் திறந்து வைத்து முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு இனிப்புகள் வழங்கினார். நிகழ்ச்சியில் வார்டு உறுப்பினர்கள் பொன்னுத்தாய், இளவரசி, நாகராஜன், ஞானம், மறவா நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்டீபன், விவசாயிகள் சங்கத் தலைவர் சிங்கக்குட்டி, வனத்துறை ஓய்வு பெற்ற அதிகாரி மாணிக்கம், ஊராட்சி உதவியாளர் மாரிதுரை, கணினி இயக்குனர் அனுபேபி, கல்யாணசுந்தரம், சுடலைமுத்து, பார்த்திப கண்ணன், சுந்த,ர் ஒப்பந்ததாரர் அண்ணாமலை என்ற வெள்ளத்துரை ஆகியோர் கலந்துகொண்டனர். ஊராட்சி செயலர் பரமசிவம் நன்றி கூறினார்.

## திருப்பத்தூர் மாவட்டத்தில் 30 இளைஞர்கள் பாமகவில் இணைப்பு



**திருப்பத்தூர், மார்ச் 2-**

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட பச்சூர் மற்றும் கொண்டகிந்தனப்பள்ளி ஊராட்சி சேர்ந்த 30க்கும் மேற்பட்ட இளைஞர்கள் நாட்றம்பள்ளி ஒன்றிய அமைப்பு செயலாளர் முருகன் வழிகாட்டுதலின்பேரில் நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய செயலாளர் கண்ணாபிரான் தலைமையில் பாட்டாளி மக்கள் கட்சியின் திருப்பத்தூர் மாவட்டத்தின் கழக செயலாளரும் சந்தன மாநகரத்தின் மாவீரருமான முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ராஜா முன்னிலையில் கட்சியில் இணைந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மாநில செயல்குழு உறுப்பினரும் கல்வி சேவகரும் கோ பொன்னுசாமி, மாவட்ட வன்னியர் சங்க தலைவர் ஆனந்தன், மாவட்ட இளைஞர் அணி செயலாளர் கிருஷ்ணன், மாவட்ட துணை செயலாளர் ரமேஷ், நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் பிரசந்த் மற்றும் முன்னாள் இளைஞரணி செயலாளர் சந்தானம் ஆகியோர் உடனிருந்தனர்.

# பொது இடங்களில் குப்பைகளை கொட்டாதீர் நகராட்சி சார்பில் துண்டு பிரசுரம் விநியோகம்



**காரைக்கால், மார்ச் 2-**

பொது இடங்களில் குப்பைகளை கொட்டாதீர். என நகராட்சி சார்பில், புதிய பஸ் நிலையத்தில் நேற்று துண்டு பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது.

காரைக்கால் மாவட்ட கலெக்டர் சோம சேகர் அப்பாராவ் அறிவுத்தின்படி, காரைக்கால் மாவட்டத்தை தூய்மை நிறைந்த மாவட்டமாக மாற்றுவதற்கான முயற்சியாக, வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காரைக்கால் மாவட்டத்தில் ஏதாவது ஒரு குப்பைகள் அதிகம் இருக்கும் பகுதியை தேர்ந்தெடுத்து சிறப்பு தூய்மை பணி நடைபெறுவது வழக்கம்.

அதன் ஒரு பகுதியாக, காரைக்கால் புதிய பஸ் நிலையத்தில் நகராட்சி சார்பில் நேற்று சிறப்பு தூய்மை பணி நடைபெற்றது. காரைக்கால் உள்ளாட்சித் துறை துணை இயக்குனர் சுபாஷ், காரைக்கால் நகராட்சி ஆணையர் சத்யா ஆகியோர்களின் மேற்பார்வையில் இந்த சிறப்பு தூய்மை பணி நடைபெற்றது. மேலும் புதிய பஸ் நிலையத்தில் உள்ள சாக்கடை மற்றும் அதனை சுற்றியுள்ள அனைத்து பகுதிகளில் உள்ள குப்பைகளை அகற்றி சுத்தம் செய்தனர். அதன் பின்பு தொற்றுப் பரவாமல் இருக்க மருந்துகள் தெளிக்கப்பட்டது. இத்தூய்மை பணியானது நகராட்சி துப்புரவு ஊழியர்கள், நகராட்சி துப்புரவு மேற்பார்வையாளர்கள், ஹெச் ஆர் ஸ்கொயர் துப்புரவு ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் பயணிகளின் பங்களிப்போடு நடைபெற்றது.

இதனை தொடர்ந்து தூய்மை பணியில் ஈடுபட்டவர்கள் பொது இடங்களில் குப்பைகள் கொட்டாதீர்கள். எச்சில் துப்ப கூடாது, நீர் நிலையங்களில் குப்பைகளை கொட்ட கூடாது, மக்கும் குப்பை மக்காத குப்பை என்று பிரித்து போட வேண்டும் என்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

# மணவெளி தொகுதியில் 90 குடும்பங்களுக்கு சிகப்பு நிற அட்டை

## சபாநாயகர் செல்வம் வழங்கினார்



**புதுச்சேரி, மார்ச் 2-**

புதுச்சேரி அரசு குடிமை பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை சார்பாக மணவெளி சட்டமன்றத் தொகுதியை சேர்ந்த வறுமை கோட்டுக்கு கீழ் வசிக்கும் 90 குடும்பங்களுக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டப்பேரவை தலைவருமான செல்வத்தின் சீரிய முயற்சியால் அவர்களின் குடும்ப உணவு பங்கீட்டு அட்டை சிகப்பு நிற அட்டையாக மாற்றப்பட்டது.

அவ்வாறு சிகப்பு நிற உணவு பங்கிட்டு அட்டையாக மாற்றம் செய்யப்பட்ட அட்டைகளை சட்டப்பேரவை தலைவர் செல்வம், நேற்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின்போது மாவட்ட பாஜக தலைவர் சுகுமாரன், துணைத்தலைவர் மணிகண்டன், தானம்பாளையம் ஞானசேகர், தொகுதி பொதுச் செயலாளர் செழியன், கலைவாணன், நோணாங்குப்பம் சுமதி, சடா நகர் செல்வி, பூரணாங்குப்பம் மணி, டி.என்.பாளையம் வீரசெல்வம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# ஈரோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆட்சியர் ஆய்வு



**ஈரோடு, மார்ச் 2-**

ஈரோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா திட்டப்பணிகளின் செயல்பாடுகள் குறித்து அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலைஞரின் கனவு இல்லம், குடிநீர் திட்டப்பணிகள், சாலை மற்றும் தெருவிளக்கு உள்ளிட்ட அனைத்து திட்டப்பணிகளின் செயல்பாடுகள் குறித்தும் மேலும் நீண்ட கால நிலுவையில் உள்ள அலுவலக கோப்புகள் மற்றும் முக்கிய அலுவலக நடைமுறை கோப்புகள் உள்ளிட்ட பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கோரிக்கை மனுக்கள் குறித்த பதிவேடு, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கோரிக்கை மனுக்கள் குறித்த பதிவேடு, முடிவுற்ற திட்டப்பணிகளுக்கு பட்டியல் சமர்ப்பித்தல் குறித்த பதிவேடு, வரிவசூல் குறித்து நிலுவையில் உள்ள இனங்கள் குறித்த ஆய்வு, இணையதளத்தின் மூலம் கட்டிட அனுமதி நிலுவை குறித்த விபரங்கள், 2025 – 2026 ஆம் ஆண்டுக்கான கலைஞரின் கனவு இல்லம் பயனாளிகள் தேர்வு குறித்த பட்டியல் விபரங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, நிலுவையில் உள்ள பணிகளை உடனடியாக முடிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் 24.02.2025 அன்று கூட்டுறவுத்துறையின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 1000 முதல்வர் மருந்தகங்களை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட திண்டல்மலை நகர கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் செயல்படும் முதல்வர் மருந்தகத்தின் செயல்பாடுகள் குறித்து நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா, ஈரோடு வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ரவிச்சந்திரன், தனலட்சுமி (கிராம ஊராட்சி) வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன், உதவி பொறியாளர் பிரகாஷ் உட்பட துறை சார்ந்த பணியாளர்கள் உடன் இருந்தனர்.

# முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு இலவச கண் பரிசோதனை முகாம்



**வல்லம், மார்ச் 2-**

விழுப்புரம் மாவட்டம். வல்லம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் முக .ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு இலவச கண் பரிசோதனை முகாம் மற்றும் நுரையீரல், பொது மருத்துவ முகாம் நடந்தது. தமிழ்நாடு முஸ்லிம் தொண்டு இயக்கம், விழுப்புரம் மாவட்ட அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை, மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம், திண்டிவனம் தலைமை அரசு மருத்துவமனை மாவட்ட காசநோய் மையம், மேல் சித்தாமூர் ஆரம்ப சுகாதார நிலையம் லைப் கோர் மருத்துவமனை திண்டிவனம் நண்பர்கள் லைன்ஸ் குடும்பம் ஆகியவை இணைந்து நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம் மற்றும் நுரையீரல் பொது மருத்துவ முகாம் வல்லம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடந்தது.

நிகழ்ச்சிக்கு வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார் முகாம் ஒருங்கிணைப்பாளர் திண்டுக்கல் முஹம்மது சலீம் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் முகாமை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார், விழுப்புரம் மாவட்ட சுகாதார நலப்பணிகளின் இணை இயக்குனர் டாக்டர் ரமேஷ் பாபு, மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்க திட்ட மேளாளர் திண்டிவனம் கண் அறுவை சிகிச்சை தலைமை மருத்துவர் ரவிச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன், ஒன்றிய செயலாளர் இளம்வழுதி, ஒன்றிய கவுன்சிலர்கள் பத்மநாபன், லட்சுமி லட்சுமணன், பாண்டியராஜன், கிருஷ்ணமூர்த்தி, வல்லம் ஊராட்சி ஒன்றிய மேலாளர் மணிகண்டன், நிர்வாகிகள் சக்திவேல், ரமேஷ், சையது அப்துல் மஜீத், வெங்கடேசன், இடிமுரசு இஸ்மாயில், மருத்துவ குழுவினர் கலந்துகொண்டனர். முகாமில் கண் பரிசோதனை, ரத்த அழுத்த பரிசோதனை, நுரையீரல் பரிசோதனை ஆகியவை நடந்து கண் பார்வை குறையுடையவர்களுக்கு அறுவை சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இம்முகாமில் தொடக்கி வைத்து பேசிய செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தமிழக அரசால் எண்ணற்ற சாதனைகளை தமிழ்நாடு முதலமைச்சர் செய்து வருகிறார். இதில் மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்பில் பிரதிநிதித்துவம் வழங்கி மாற்றுத்திறனாளிகளையும் வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற இந்தியாவிலேயே ஒரே முதல்வர் தமிழக முதலமைச்சர் முக ஸ்டாலின் தான். அவருக்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும். இம்முகாமில் கண் பரிசோதனை செய்து அறுவை சிகிச்சைக்கு சென்ற அனைவருக்கும் இலவசமாக மூக்கு கண்ணாடி வழங்க உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

# ராயல் கேர் மருத்துவமனையில் கருத்தரங்கம்

**கோவை, மார்ச் 2-**

கோவை ராயல் கேர் மருத்துவமனை மற்றும் இந்திய ஃபோகஸ்டு அல்ட்ரா சவுண்டு சங்கத்தினர் இணைந்து இந்தியாவில் முதல்முறையாக ஃபோகஸ்டு அல்ட்ரா சவுண்டு சிகிச்சை தொடர்பான கருத்தரங்கம் சின்னியம்பாளையம் பகுதியில் உள்ள நட்சத்திர கூட்டரங்கில் நடைபெற்றது.

கோவை நீலாம்பூரில் உள்ள ராயல் கேர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் உயர்தர மற்றும் நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் அனைத்து விதமான நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

சிறந்த நரம்பியல் அறுவை சிகிச்சை மையம் என்ற அங்கீகாரத்தை அமெரிக்க நாட்டின் எஸ்.ஆர்.சி. அமைப்பிடம் பெற்றுள்ள ராயல் கேர் மருத்துவமனை தற்போது இந்தியாவில் முதன் முறையாக ஃபோகஸ்டு அல்ட்ரா சவுண்டு சிகிச்சை தொடர்பான சர்வதேச கருத்தரங்கை நடத்தி உள்ளது.ராயல் கேர் சூப்பர் ஸ்பெசாலிட்டி மருத்துவமனையின் தலைவர் டாக்டர் மாதேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இதில், உள்நாட்டில் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் கொரியா, ஸ்பெயின், பிரிட்டன் உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்தும் மருத்துவர்கள் பலர் கலந்துகொண்டனர். இதில் ஃபோகஸ்டு அல்ட்ரா சவுண்ட் சிகிச்சை முறை குறித்து பல்வேறு விளக்க உரைகளுடன் நேரடியாக சிகிச்சை மேற்கொள்வதும் காணொலி வாயிலாக ஒளிபரப்பி எடுத்து கூறப்பட்டது. முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் மாதேஸ்வரன், கத்தியின்றி ரத்தம் வராமல் அறுவை சிகிச்சை செய்யும் உலகின் அதிநவீன சிகிச்சையாக இந்த சிகிச்சை முறையை மேற்கொள்வதாகவும், இதுகுறித்து மருத்துவர்கள் தெரிந்து கொள்ளும் விதமாக இந்த கருத்தரங்கம் நடைபெறுவதாக அவர் தெரிவித்தார். பார்கின்சன் நோய் எனப்படும் நரம்பியல் சார்ந்த சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் நவீன தொழில் நுட்பம் புற்றுநோய் போன்ற நோய்களுக்கும் பயன்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார். உடன் மருத்துவ இயக்குனர் டாக்டர் பரந்தாமன் சேதுபதி, தலைமை செயல் அலுவலர் டாக்டர் மணி செந்தில் குமார், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர். கே. ரகுராஜ பிரகாஷ் மற்றும் மருத்துவர்கள் ஆர். செந்தில்குமார், ராஜ்குமார், கனகராஜூ, விஜயன், அருள் செல்வன் ஆகியோர் உடனிருந்தனர்.



E-mail:maalaiexpresspdy@gmail.com
• ஞாயிறு • மார்ச் 2, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# ஈரோடு மாநகராட்சியில் தூய்மை பணி



ஈரோடு, மார்ச் 2-

ஈரோடு மாநகராட்சியில் உள்ள 4 மண்டலங்களிலும் தலா 60 பணியாளர்களை கொண்டு கடந்த 25.02.2025 முதல் குழு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வாரமும் மண்டலத்திற்கு 2 வார்டுகள் என்ற அடிப்படையில் வாரத்திற்கு 8 வார்டுகள் சுத்தம் செய்யப்படுகிறது. இந்த பணி 60 வார்டுகளிலும் மேற்கொள்ளும் வகையில் அட்டவணை தயார் செய்யப்பட்டு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, இன்று (28.02.2025) 6, 55, 44 மற்றும் 35 ஆகிய 4 வார்டுகளில் குழு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டது. இதனை அனைத்து தலைமையக அலுவலர்களும் மேற்பார்வையிட்டனர்.

சுகாதாரத்தை ஊக்குவிப்பது, நோய் பரவுவதை குறைப்பது, சுத்தமான சூழலை பராமரிப்பது, சுகாதார நிலையை மேம்படுத்துவது என்பதன் அடிப்படையில் குழு தூய்மைப்பணி செய்யப்படுகிறது. பொதுமக்கள் வீட்டில் உருவாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று தரம் பிரித்து வீட்டிற்கு வரும் தூய்மை பணியாளர்களிடம் வழங்க வேண்டும். மேலும், தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை வியாபாரிகளும், மக்களும் தவிர்க்க வேண்டும். குப்பைகளை தெருவில் வீசுவதை தவிர்த்து நகரம் சுத்தமாக வைத்துகொள்ள மக்கள் ஒத்துழைக்க வேண்டும் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

# சாலை பாதுகாப்பு ஆய்வுக்கூட்டம்



சேலம், மார்ச் 2-

சேலம் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து காவல்துறை மற்றும் அரசுத்துறை அலுவலர்களுடனான மாதாந்திர ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பிருந்தாதேவி தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: சாலை விபத்துகளை முற்றிலும் குறைத்து விபத்தில்லா பயணத்தை உருவாக்கிடும் வகையில் பல்வேறு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில், சேலம் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த மாதாந்திர ஆய்வுக் கூட்டம் காவல்துறை. போக்குவரத்துத்துறை, வருவாய்த்துறை மற்றும் நெடுஞ் சாலைத்துறை அலுவலர்களுடன் நடத்தப்படுகிறது. உள்ளிட்ட குறிப்பாக, மனித உயிர்களின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புகளைத் தவிர்க்கும் நோக்கில் மாவட்ட நிர்வாகத்தால் தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் ஹெல்மெட் அணிதல், நான்கு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் சீட் பெல்ட் அணிதல், நிர்ணயிக்கப்பட்ட வேகத்தில் வாகனங்களை இயக்குதல் உள்ளிட்ட போக்குவரத்து விதிகளை வாகன ஓட்டிகள் கடைபிடிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், தொடர் சாலை விபத்துகள் ஏற்படும் இடங்களைக் கண்டறிந்து காவல்துறை, நெடுஞ் சாலைத்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் வருவாய்த்துறை உள்ளிட்ட துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து ஆய்வு மேற்கொண்டு எதிர்வரும் காலங்களில் சாலை விபத்துகள் ஏற்படாமல் தடுக்கும் வழிமுறைகளைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று, சாலை விதிகளை மீறும் வாகன ஓட்டிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் வட்டார போக்குவரத்து அலுவலகம் மூலம் கடந்த ஜனவரி 2025 மாதத்தில் அதிக வேகமாக வாகனம் ஓட்டுதல், தலைக்கவசம் அணியாமல் வாகனம் ஓட்டுதல், கைப்பேசி உபயோகித்துக்கொண்டு வாகனம் இயக்குதல், அதிக ஆட்களை வண்டியில் ஏற்றிச் செல்லுதல், அதிக பாரங்களை வண்டியில் ஏற்றிச் செல்லுதல் உள்ளிட்ட காரணங்களுக்காக 219 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று, 137 நபர்களின் வாகன ஓட்டுநர் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள சாலைகளைக் கண்டறிந்து தேவையான சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பேருந்து நிறுத்தங்களில் உரிய நேர அட்டவணைகளைப் பின்பற்றி வாகன நெரிசல் ஏற்படாத வகையில் பயணிகளின் வசதிக்கேற்ப சீர்படுத்திட போக்குவரத்துத்துறை அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுகளை அதிகளவில் ஏற்படுத்தும் பொருட்டு அவர்களுக்கான அறிவுரைகள் மற்றும் வாகனம் ஓட்டும்போது கடைபிடிக்கப்படவேண்டிய முக்கிய வழிகாட்டுதல்களை பின்பற்றுதல் உள்ளிட்டவைகள் விழிப்புணர்வு பேரணிகள், சாலை பாதுகாப்பு குறித்த கருத்தரங்குகள் போன்ற நிகழ்வுகள் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன.

சாலை விபத்துகளை முற்றிலும் தடுக்கும் வகையில் அலுவலர்கள் சாலை பாதுகாப்பு குறித்துத் தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை அதிகளவிலான பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாநகர காவல் துணை ஆணையர் கீதா, மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார், வருவாய் கோட்டாட்சியர்கள் அபிநயா (சேலம்), லோகநாயகி (சங்ககிரி), கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராஜன் உள்ளிட்ட வருவாய்த்துறை, காவல்துறை, போக்குவரத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம்



சேலம், மார்ச் 2-

சேலம், அஸ்தம்பட்டி ஆய்வு மாளிகையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குபின் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் ஊரகப் பகுதிகளுக்கு பல்வேறு திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக பல்வேறு நிதி நெருக்கடிகள் இருந்தாலும் பொதுமக்களின் தேவைகள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டங்கள் பொதுமக்களுக்கு முழுமையாகவும், விரைவாகவும் கொண்டு சேர்த்திட மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்றையதினம் நடத்தப்படுகிறது.

குறிப்பாக கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில் பொதுமக்களின் குடிநீர் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அரசு அலுவலர்கள் பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. சீரான குடிநீர் வழங்கப்படுவதை அரசு அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து உறுதி செய்வதுடன் எதிர்கால குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. குடிநீர் தேவைகள் முழுமையாக பொதுமக்களுக்கு கிடைக்க செய்வதை உறுதி செய்யும் வகையில் இனிவரும் நாட்களில் தொடர்ச்சியாக கள ஆய்வு பணிகள் மற்றும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மற்றும் சத்துணவு திட்டங்களில் சத்துணவு செய்லபாடுகள் தொடர்ந்து சிறப்பாக செயல்படுத் வகையில் தனி கவனம் செலுத்தி தொடர்புடைய அலுவலர்கள் பள்ளிக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ளவும், ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ள பள்ளிக் கூடங்களில் பழுதுகள் ஏதேனும் உள்ளனவா என்பதை அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு தேவைக்கேற்ப புதிய வகுப்பறை கட்டடங்களை கட்டி வழங்கிடவும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஊராட்சிகளில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் தெருக்களில் குப்பைகள் சேராத வகையில் தூய்மைப் பணியாளர்கள் தினமும் அகற்றப்படுவதை உறுதி செய்வதுடன் நோய் தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணித்திடவும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த முன்மொழிவுகளை அனுப்பி நிர்வாக அனுமதியை உடனுக்குடன் பெற்று பணிகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, கடந்த 4 ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், நபார்டு திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டு வரும் தார் சாலை பணிகள் குறித்தும், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்பட்டு வருவது குறித்தும், ஊரக வீடுகள் பழுதுபார்க்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் சீரமைக்கும் பணிகள் குறித்தும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீடுகள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் கட்டப்பட்டுள்ள வீடுகள் குறித்தும், பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுவரும் புதிய வகுப்பறைக் கட்டடப் பணிகள் போன்ற திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், அனைத்து கிராமங்களும் சமூக பொருளாதார வளர்ச்சியினை முழுமையாக அடைவதை உறுதி செய்யும் பொருட்டு, அனைத்துகிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடர்புடைய அலுவலர்கள் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு பணிகளை குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்குள் முடித்திட அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ள வேண்டுமென இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) பொன்மணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சிவலிங்கம், செயற்பொறியாளர் மாது, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சங்கமித்திரை உள்ளிட்ட அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸில் இடம் பெறும் நிகழ்ச்சி



கோவை, மார்ச் 2-

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஃபீனிக்ஸ் ரன்னர்ஸ் கிளப் சார்பாக சக்கராசனத்தில் ஒரு நாளைக்கு 50 நடைகள் வீதம் தொடர்ந்து 50 நாட்கள் நடந்தது. இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸில் இடம் பெறும் நிகழ்ச்சி நிறுவன தலைவர் ஆர்.கணேஷ் சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கோவை அத்லெடிக் கிளப் செயலாளர் சீனிவாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். இதுகுறித்து நிறுவன தலைவர் கணேஷ் சிவக்குமார் கூறுகையில், ஃபீனிக்ஸ் ரன்னர்ஸ் கிளப் 21 வருடங்களாக வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றது. பல தடகள வீரர் வீராங்கனைகளை உருவாக்கியது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. அதன் ஒரு பகுதியாக தியூதி ஜெயின் என்ற 11 வயது குழந்தை சக்ராசனத்தில் தினமும் 50 நடைகள் வீதம் 50 நாட்கள் நடந்து இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸில் இடம்பெற்று சாதனை படைக்கும் நிகழ்ச்சி நமது முதல்வர் ஸ்டாலின் 72 வது பிறந்தநாளன்று துவங்கியது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. ஃபீனிக்ஸ் ரன்னர்ஸ் கிளப்பிற்கும் தயூதி ஜெயினிற்கும் கோவை அத்லெடிக் கிளப் தலைவர் டாக்டர் சுமன், சேர்மேன் விஜயகுமார் ஆகியோர் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் ஃபீனிக்ஸ் ரன்னர்ஸ் கிளப் செயலாளர் ராஜ்பஞ்சு, பொருளாளர் ரகுநாதன், அத்லெடிக் கிளப் துணை செயலாளர் சிவக்குமார் துரைராஜ், துணை தலைவர்கள் கோவை ரமேஷ், ரத்தினவேல், மேலாளர் தர்மராஜ், பயிற்சியாளர்கள், வீரர், வீராங்கனைகள் மற்றும் பெற்றோர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# முக ஸ்டாலின் பிறந்தநாள் விழா



மதுரை, மார்ச் 2-

தமிழக முதலமைச்சர் முக ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்டம் சிந்தாமணியில் தெற்கு மாவட்ட திமுக அவனி கிழக்கு பகுதி 89 வட்டம் சார்பாக இனிப்பு வழங்கி அன்னதானம் வழங்கும் நிகழ்வு பகுதி அவைத் தலைவர் கணேசன் தலைமையில் 89 வது வட்ட செயலாளர் சரத்குமார் முன்னிலையில் நடைபெற்றது. முன்னதாக நிகழ்வில் வட்ட செயலாளர் வழக்கறிஞர் சரத்குமார், திமுக கட்சி உறுப்பினர்கள் முன்னிலையில் திமுக கட்சி கொடி ஏற்றி உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி பாண்டி, தெற்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் ரதி, சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கணேசன், 89 வது வட்ட அவைத் தலைவர் கருணாநிதி, பொருளாளர் ராஜேந்திரன், துணைச் செயலாளர்கள் தெய்வேந்திரன், குணசீலன், ஜாய்ஸ்மேரி, வட்ட பிரதிநிதிகள் தங்கராஜ், பாண்டுரங்கன், மணிமாறன் உட்பட கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்




தென்காசி, மார்ச் 2-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர் தெரிவித்ததாவது, தென்காசி மாவட்டத்தில் 2024–2025 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை ஒத்திசைவு சாகுபடி செய்யப்பட்ட நெல் 41589 ஹெக்டேர், சிறுதானியங்கள் 24202 ஹெக்டேர், பயறு வகைகள் 29349 ஹெக்டேர் பருத்தி 1664, கரும்பு 1387 ஹெக்டேர், எண்ணெய் வித்து 1337 ஹெக்டேர், மலைப் பயிர்கள் 13870 ஹெக்டேர், பழங்கள் 10092 ஹெக்டேர், காய்கறிகள் 1983 ஹெக்டேர், வாசனைப் பயிர்கள் 715 ஹெக்டேர், மருத்துவப் பயிர்கள் 3 ஹெக்டேர், பூக்கள் 533 ஹெக்டேர் பரப்பும் ஒத்திசைவு செய்யப்பட்டது. மழையளவு, நீர் இருப்பு விபரம் மற்றும் இடுபொருட்கள் இருப்பு விபரம் அனைத்து விவசாயிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது.

குருவிகுளம் வட்டார வேளாண்மைத் துறையினர், கடையநல்லூர் மற்றும் செங்கோட்டை வட்டார தோட்டக்கலைத் துறையினர் ஏற்பாடு செய்திருந்த கண்காட்சியினை தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துவக்கி வைத்து பார்வையிட திரளான விவசாயிகளும் கண்டு பயனடைந்தனர்.

மேலும், வேளாண்மைத் துறை சார்பில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு ரூ.2075 மானியத்தில் மின்கலத் தெளிப்பானையும், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத் துறையினர் மூலம் காய்கறி பரப்பு விரிவாக்கத்திற்கு 3 பயனாளிகளுக்கு ரூ.60,000 மானியத்தில் இடுபொருட்களையும், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வேளாண்மை இயந்திரமயமாக்கல் துணை இயக்கத் திட்டத்தின் கீழ் 08 பயனாளிகளுக்கு ரூ.4,40,000 மானியத்தில் பவர் வீடர் கருவிகளையும், 01 பயனாளிக்கு ரூ.65,520 மானியத்தில் சுழற்கலப்பையினையும் வழங்கினார்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 206 மனுக்களுக்கு 15 நாட்களுக்குள் விரிவான மற்றும் விவசாயிகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய பதிலை வழங்குமாறு அனைத்து துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வன அலுவலர் அகில் தம்பி, அம்பாசமுத்திரம் வனக்கோட்ட துணை இயக்குநர் இளையராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் மகாதேவன், வேளாண்மை துணை இயக்குநர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவ) கனகம்மாள், வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய மற்றும் மாநிலத் திட்டம்) பிரபாகரன், துணை இயக்குநர், வேளாண் வணிகம் மற்றும் விற்பனை வசந்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மைக்கேல் அந்தோணி பெர்ணான்டோ, வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் சங்கர், முதுநிலை மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ரியாஜ் அகமது, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் நரசிம்மன் மற்றும் அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள், அனைத்து வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், அனைத்து துறை அலுவலர்கள், அனைத்து விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாய பெருமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# கடலூர் மாவட்டத்தில் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வை 30,159 மாணவர்கள் எழுதுகின்றனர்

## ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தகவல்



கடலூர், மார்ச் 2-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பள்ளிக்கல்வித்துறை சார்பில், நடப்பு கல்வியாண்டிற்கான 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு நடைபெறவுள்ளதை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர். சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முழுவதும் மேல்நிலைத் தேர்வு இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகள் வரும் 03.03.2025 முதல் தொடங்கப்பட்டு 25.03.2025 வரையில் நடைபெறவுள்ளது. 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வானது கடலூர் கல்வி மாவட்டத்தில் 134 பள்ளிகளில் 67 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 8,676 மாணவர்களும் 9,119 மாணவிகளும் என மொத்தம் 17,795 மாணவ,/மாணவியர்கள் தேர்வு எழுத உள்ளனர்.

விருத்தாசலம் கல்வி மாவட்டத்தில் 112 பள்ளிகளில் 55 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 6,273 மாணவர்களும் 6,091 மாணவிகளும் என மொத்தம் 12.364 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுத உள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் 122 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 246 பள்ளிகளைச் சேர்ந்த 14,949 மாணவர்களும், 15.210 மாணவிகளும் என மொத்தம் 30.159 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுத உள்ளனர்.

இத்தேர்விற்கு 5 வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களும், மண்டல அளவிலான 3 விடைத்தாள் சேகரிப்பு மையங்களும், 3 விடைத்தாள் மதிப்பீட்டு மையங்களும், 28 வினாத்தாள் வழங்கப்படும் வழித்தடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆயுதம் தாங்கிய காவலர்கள் மூலம் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்திடவும், தேர்வு நடைபெறும் நாட்களில் தேர்வு மையங்களில் ஒருவர் வீதம் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர். 28 வழித்தட அலுவலர்களும், 122 முதன்மை கண்காணிப்பாளர்களும், 6 கூடுதல் முதன்மை கண்காணிப்பாளர்களும், 122 துறை அலுவலர்களும், 6 கூடுதல் துறை அலுவலர்களும், 1,567 அறை கண்காணிப்பாளர்களும், 302 நிலைப்படை, பறக்கும் படை உறுப்பினர்களும் தேர்வுப் பணியில் ஈடுபட உள்ளனர்.

தேர்வு மையங்களுக்கு உரிய நேரத்தில் வினாத்தாட்கள் செல்வதை உறுதி செய்தல், விடைத்தாட்களை காப்பு மையங்களுக்கு கொண்டு செல்வதில் எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காத வகையில் பள்ளிக்கல்வித்துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ளவும், தேர்வு நடைபெறும் நாட்களில் தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், போக்குவரத்துத்துறை சார்பில், மாணவர்கள் தேர்வு மையங்களுக்கு உரிய நேரத்தில் சென்றிட தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திடவும், தேர்வு மையங்களில் சுகாதாரம் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாநகராட்சி ஆணையாளர் அனு, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எல்லப்பன், கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள், மின்சாரத்துறை, காவல்துறை, போக்குவரத்துத்துறை உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நெல்லை, மார்ச் 2-

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது, திருநெல்வேலி மாவட்டத்தில் சென்ற மாதம் 35.28 மி.மீ மழை பெய்துள்ளது. இது மாவட்டத்தின் மழையளவான 50.2 மி.மீஐ விட 29.7 சதவிகிதம் குறைவாகும். மேலும் நடப்பு 2025 பிப்ரவரி மாதத்தில் 24.01.2025 ம் தேதி வரை 1.65 மி.மீ மழை பெய்துள்ளது, இது பிப்ரவரி மாத மழையளவான 30 மி.மீ விட 94.54 சதவிகிதம் குறைவாகும்

திருநெல்வேலி மாவட்டத்தில் நடப்பாண்டு இதுவரை 73956 ஹெக்டேர் பரப்பில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டு பெய்த மழையளவு மற்றும் அணைகளில் நீர்திறப்பு ஆகியவற்றால் சென்ற ஆண்டை ஒப்பிடும் பொழுது நடப்பாண்டு 5765 ஹெக்டேர் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது. இவற்றில் சிறுதானியங்கள் 16.5% எண்ணெய் வித்துப்பயிர்கள் 93.26%, பயறு வகைகள் 8.7% பழவகைகள் 13.32% மற்றும் காய்கறிப்பயிர்கள் 19.5% அதிகரித்துள்ளது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் மூலம் சென்ற 09.02.2025 முதல் விவசாயிகளின் நில உடைமை ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு வேளாண் அடுக்ககம் வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு தனிக்குறியீடு வழங்கப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக மாவட்டத்தில் உள்ள 47 ஆயிரம் பிம் கிசான் திட்ட விவசாயிகளை இத்திட்டத்தில் சேர்த்திட அரசால் அறிவுறுத்தப்பட்டு மாவட்டத்தில் 25.02.2025 வரை சுமார் 21511 விவசாயிகளின் விபரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

கனமழையின் காரணமாக 420.56 எக்டேர் பரப்பில் நெல் பயிரும், 4706.00 எக்டேர் உளுந்து மற்றும் பயறு வகை பயிரும், 24.80 எக்டேர் மக்காச்சோளப் பயிரும், 1.8 எக்டேர் பரப்பில் எள்பயிரும், 0.48 எக்டேர் கரும்பு பயிரும். வாழை 159.03 எக்டேரிலும், சிறுகிழங்கு 14.10 எக்டேரிலும், சேனை கிழங்கு 3.49 எக்டேரிலும், சேப்பங்கிழங்கு 3.77 எக்டேரிலும், இதர தோட்டக்கலைப் பயிர்கள் 3.23 எக்டேரிலும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது இப்பயிர் சேத விபரங்கள் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்த்துறையினரால் கூட்டுபுல தணிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய நிவாரணம் கோரி மாவட்ட நிர்வாகம் மூலம் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

மானூர் வட்டாரத்தில் சென்ற 05.01.2024 அன்று எதிர்பாராத காலத்தில் பெய்த காற்றுடன் கூடிய கனமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட 31.69 ஹெக்டேர் நெல் பயிர் சேதத்திற்கான நிவாரணத் தொகை அரசிடமிருந்து வரபெற்று ரூ.5.50 இலட்சம் மானூர் வட்டத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. விரைவில் இத்தொகை பாதிப்புக்குள்ளான 135 விவசாயிகளுக்கு ஆதார் எண் இணைக்கப்பட்டுள்ள வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

மாவட்டத்தில் நடப்பு பிசான பருவத்தில் விளைந்துள்ள நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்திடவும் இடைத்தரகர்கள் மூலம் பாதிக்கப்படாமல் இருக்க மொத்தம் 62 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறந்திட உத்தரவிடப்பட்டு திறக்கப்பட்டு வருகிறது. எனவே, விவசாயிகள் தங்களது நெல்லை இந்நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயனடையுமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நடப்பாண்டில் பிப்ரவரி மாதம் 20ம் தேதி வரை கூட்டுறவுத்துறை மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பயிர் கடனாக ரூ.650.04 கோடி 34944 விவசாயிகளுக்கு உழவர் கடன் அட்டை மூலம் வழங்கப்பட்டுள்ளது. கால்நடைத்துறை மூலம் 5226 விவசாயிகளுக்கு விவசாய கடன் அட்டை மூலம் 40.58 கடன் வழங்கப்பட்டுள்ளது எனவும், மேலும் தொடர்ந்து விவசாயிகளுக்கு தங்குதடையின்றி கடன் உதவி கிடைக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு முதல்வரால் அறிவிக்கப்பட்ட “மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்“ என்ற சிறப்பு திட்டத்தின்கீழ் வேளாண் விரிவாக்க மையங்களின் மூலமாக மானிய விலையில் 935 ஹெக்டேர் பரப்பிற்கு பசுந்தாள் உர விதைகள் விநியோகம் செய்யப்பட்டு விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டு மடக்கி உழவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத்துறை மூலம் ஊட்டச்சத்து தோட்டபயிர் தொகுப்பு வழங்குதல் மற்றும் ஒன்றிய மாநில அரசு பகிர்வு நிதி உதவியுடன் மண்புழு உரத்தொட்டி அமைத்தல் ஆகிய இனங்களுக்கு ரூ. 12.27 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிய பயனாளிகளுக்கு வழங்கி முடிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தோட்டக்கலை துறை மூலம் 2024–2025 ஆண்டு தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தில் ரூ.235.276 லட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது பரப்பு விரிவாக்க இனத்தில் 333 ஹெக்டேர், நிலப்போர்வை 100 ஹெக்டர். வாழைதார் மூடும்பை 100 ஹெக்டேர், பண்ணை குறைபாடு களைதல் 100 எண்கள். மண்புழு உரப்படுகை 100 எண்கள். நிழல்வலைக்குடில் 1000 ச.மீ. பறவைதடுப்புவலை 2500ச.மீ, பண்ணைகுட்டை 30 எண்கள் மற்றும் தேனீவளர்ப்பு இனத்தில் 525 எண்கள். நிரந்தர மண்புழு உரக்கூடம் 5 எண்கள், சிப்பம் கட்டும்அறை 8 எண், நடமாடும் காய்கனிவண்டி 50எண்கள் ஆகமொத்தம் ரூ.115.143 லட்சம் நிதி அளவில் சாதனை அடையப்பெற்றுள்ளது.

மாவட்டத்தில் சென்ற மாத விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தின் மூலம் பெறப்பட்ட வேளாண்மை சார்ந்த 116 மனுக்கள் மற்றும் வேளாண்மை சாராத மனுக்கள் 45 இவற்றிற்கு பதிலுரைகள் பெறப்பட்டு சம்மந்தப்பட்ட மனுதாரருக்கு சம்மந்தப்பட்ட துறையினருக்கும் அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்கள்.

முன்னதாக பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, இணை இயக்குநர் வேளாண்மை வெங்கடேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், விவசாயிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வளர்ச்சி திட்டப்பணிகளை ஆட்சியர் ஆய்வு



கன்னியாகுமரி, மார்ச் 2-

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்துக்குட்பட்ட செண்பகராமன்புதூர் பகுதியில் அமைந்துள்ள தென்னை மதிப்புக்கூட்டுதல் மையம், திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட குலசேகரம் பகுதியில் அமைந்துள்ள கன்னியாகுமரி ரப்பர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் உள்ளிட்டவைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்டப்பணிகள் அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

தோவாளை வட்டத்துக்குட்பட்ட செண்பகராமன் புதூரில் தமிழ்நாடு அரசு வேளாண் வணிகத்துறை மற்றும் வேளாண் விற்பனைக்குழு நிதியுதவியுடன் ரூ.16 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள தென்னை மதிப்பு கூட்டுதல் மையத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த மதிப்பு கூட்டு மையத்தில் இயல்பு நிலை தேங்காய் எண்ணெய் எடுக்கும் அலகு. உலர் தேங்காய் பொடி தயாரிக்கும் அலகு மற்றும் மரச்செக்கு அலகுகளை ஆய்வு செய்து அனைத்து அலகுகளையும் முழு அளவில் செயல்படுத்திட துறை சாரந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இம்மதிப்புக்கூட்டுதல் மையத்தை சிறப்பாக செயல்பட அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் தோவாளை வட்டத்திற்குட்பட்ட ஆரல்வாய்மொழியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் கிராம அறிவு மையம் அமைத்திட இடம் பார்வையிடப்பட்டது. கிராம அறிவுசார் மையம் தாட்கோ மூலம் கட்டப்பட உள்ளது.

அதனைத்தொடர்ந்து திருவட்டார் வட்டம் குலசேகரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் அமைந்துள்ள கன்னியாகுமரி ரப்பர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ஆய்வு மேற்கொண்டதோடு, ரப்பர் சீட்கள் தயாரிக்கும் இயந்திரம் மற்றும் ரப்பர் நர்சரி மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டுள்ள ரப்பர் பால் எடுக்கும் உபகரணங்கள் மற்றும் ரப்பர் உலர்ப்பான் ஆகியவை நேரில் பார்வையிட்டு அய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் ரப்பர் ரோலர் மூலம் ரப்பர் சீட்டு தயாரிக்கும் செயல்முறை விளக்கம் குறித்தும், ரப்பர் கொள்முதலில் உள்ள இடர்பாடுகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது.

தொடர்ந்து பொன்மனை பெருவிளைகிடவு குளத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024 2025 ஆன கூட்டுக்குளம் மேம்பாடு செய்தல் பணி ரூ.34 லட்சம் மதிப்பில் 108 மீட்டர் நீளம் நான்கு மீட்டர் உயரத்திற்கு நடைபெற்றுவரும் பணிகள் நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள முக்கிய சுற்றுலாத்தலங்களில் திற்பரப்பு அருவி ஒன்றாகும். இவ்வருவி நாகர்கோவிலிருந்து 42 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சுற்றுலாப்பயணிகள் திற்பரப்பு அருவிக்கு அதிகளவில் வருகை புரிகின்றனர்.

தற்போது சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ரூ.4.30 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உடைமாற்றும் அறை, கழிவறைகள், சிறுவர் பூங்கா உள்ளிட்ட பல்வேறு அடிப்படை சுற்றுலா வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இன்றைய ஆய்வில் பெண்கள் உடை மாற்றும் அறை மற்றும் கழிப்பறைகள் தற்காலிகமாக ஏற்படுத்தி சுற்றா பயணிகளுக்கு இடையூறு இல்லமால், அனைத்து பணிகளையும் ஜூன் மாதத்திற்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருமாறு துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் திருக்கோவில் சுற்றுச்சுவர்களில் உள்ள புதர்களை அகற்றி வர்ணம் பூசி வண்ண ஓவியங்கள் தீட்டி அழகுபடுத்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கனகராஜ், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) ஜெங்கின் பிரபாகர், மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், துணை இயக்குநர் கீதா (வேளாண்மை வணிகம்), விற்பனை குழு செயலாளர் விஷ்ணப்பன், உதவி பொறியாளர் விஜில்சிங், திற்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலர் விஜயகுமார், திற்பரப்பு பேரூராட்சி தலைவர், ரப்பர் உற்பத்தியாளர் குழு தலைவர் பிரதீப், ரப்பர் உற்பத்தியாளர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# பிரதமரின் பட்ஜெட்டிற்கு பிந்தைய கருத்தரங்க உரை ஒளிபரப்பு

## கவர்னர், சபாநாயகர் பங்கேற்பு



**புதுச்சேரி, மார்ச் 2–**

பிரதமரின் பட்ஜெட்டிற்கு பிந்தைய கருத்தரங்க உரை நான்கு பிராந்தியங்களில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் சார்பில் விவசாயமும் ஊரக வளர்ச்சியும் என்ற தலைப்பில் பட்ஜெட்டுக்கு பிந்தைய காணொலி கருத்தரங்கம் நேற்று நடந்தது.

இதில், பிரதமர் மோடி பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். பிரதமரின் உரை நேரடி நிகழ்ச்சியாக புதுச்சேரி ஆனந்தா இன் ஓட்டலில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

கவர்னர் கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். பிரதமர் இந்தி மொழியில் ஆற்றிய உரையை கவர்னரின் செயலர் மணிகண்டன் பார்வையாளர்களுக்கு தமிழில் விளக்கிக் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் வேளாண் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, 10 ஆண்டுகளுக்கு முன் 2 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த வேளாண் உற்பத்தி தற்போது நான்கு லட்சம் மெட்ரிக்



டன்னாக பெருகி இருப்பது குறித்து விளக்கப்பட்டது. மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய வேளாண் மற்றும் மீன்வள மேம்பாட்டு திட்டங்கள் ஆகியவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சபாநாயகர் செல்வம், தலைமை செயலர் சரத் சவுகான், மீன்வளத்துறை இயக்குநர் முகமது இஸ்மாயில், இணை இயக்குநர் தெய்வசிகாமணி, அதிகாரிகள், மீனவ கிராம பஞ்சாயத்தார், விசைப்படகு உரிமையாளர்கள், மீனவர்கள் கலந்துகொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா




**கோவை, மார்ச் 2–**

தமிழ்நாடு முதலமைச்சரும் கழக தலைவருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் 72வது பிறந்தநாள் விழாவை தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் வி செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின்பேரில் கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் கார்த்திக் ஆலோசனையின்படி திமுக கோவை மாநகர் மாவட்ட பொறியாளர் அணி சார்பாக காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு தலைமையில் பிறந்தநாள் விழாவில் பயனிகள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைத் தலைவர் வசந்தகுமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் வைரமணி, என்.வி.எஸ் செந்தில்குமார், ஆண்டனி, ஞானவேல், எல்பிஎப். மாநில செயலாளர் வழக்கறிஞர் வினோத்குமார், சத்தியமூர்த்தி, லாரன்ஸ் மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மதுரை அரோபனா இந்தியன் பள்ளி 3வது ஆண்டு விழா



**மதுரை, மார்ச் 2–**

மதுரை, அரோபனா இந்தியன் பள்ளியின் 3வது ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் கோலாகலமாக நடைபெற்றது. விழாவில் ஸ்ரீ அரபிந்தோ மீரா கல்விக்குழுத் தலைவர் முனைவர் சி.சந்திரன் தலைமை தாங்கினார். பள்ளி நிர்வாக இயக்குநர் விசி. அபிலாஷ், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை வரவேற்றுப் பேசினார். இணை இயக்குநர் நிக்கிபுளோரா கலந்து கொண்டு பரிசு வழங்கினார். இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக திரைப்பட இசையமைப்பாளர் ரமேஷ் விநாயகம் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார். இதனைத் தொடர்ந்து அவர் பேசுகையில், இந்தப் பள்ளி எதிர்காலத்தை நோக்கி மிகுந்த பார்வையுடன் நகர்கிறது. இதன் நிர்வாகம் கல்விக்கான மிகுந்த உழைப்பையும் ஆர்வத்தையும் கொண்டுள்ளது. எனவே உண்மையிலேயே ஒரு சிறந்த இடத்தில் நீங்கள் இருக்கின்றீர்கள். நான் உலகம் முழுவதும் பல நாடுகளுக்கு சென்றுள்ளேன். ஆனால் இவர்களின் யுனிவர்சல் பள்ளியின் வளாகம் உள்கட்டமைப்பு, கல்வித் தரம் மிக அற்புதமாகவும், ஆச்சரியம் அளிக்கக் கூடிய வகையிலும் இருக்கிறது.

குழந்தைகளிடம் இயல்பாகவே திறமைகள் இருக்கும். அவர்களிடம் என்ன திறமை இருக்கிறது என்பதை பெற்றோர்கள் கண்காணித்து அவர்களை சரியான முறையில் ஊக்குவித்தால் அந்தத் துறையில் அவர்கள் சாதனை படைப்பார்கள், தற்போதுள்ள போட்டி நிறைந்த உலகத்தில் குழந்தைகளுக்கும் பல பிரச்சினைகள் உள்ளன, அவற்றை எதிர்கொள்ள அவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் வாழ்க்கையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை சந்தித்து வெற்றிபெற முடியும் என்று மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்தி பேசினார்.

# நடமாடும் கால்நடை அவசர சிகிச்சை வாகனத்தை ஆட்சியர் துவக்கி வைத்தார்



**கடலூர், மார்ச் 2–**

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் நடமாடும் கால்நடை அவசர சிகிச்சை வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்ததாவது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு கால்நடைகளை பராமரித்திடவும், பாதுகாத்திடவும் பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

கடலூர் மாவட்டத்தில் தேசிய விலங்குகள் நோய் தடுப்பு திட்டத்தின்கீழ் 6 நடமாடும் கால்நடை கால்நடை மருத்துவ ஊர்தி (1962) ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மேலும் 2 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி (1962) பண்ருட்டி மற்றும் மங்களூர் ஒன்றியங்களுக்கு 01.03.2025 முதல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் கிராம புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராம மக்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகளை நன்கு பராமரித்திடவும், மேம்பட்ட தரமான மருத்துவ சிகிச்சை கால்நடைகளுக்கு அளிக்கவும், “இரண்டாம் வெண்மை புரட்சியை” ஏற்படுத்திடவும் முக்கிய காரணியாக இருக்கும்.

கால்நடை மருத்துவ சிகிச்சை கிடைப்பதில் சிரமம் உள்ள தொலை தூர கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு, 245 நடமாடும் கால்நடை மருத்துவ சேவை வாகனங்கள் தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. கடலூர் மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களிலும், 6 நடமாடும் கால்நடை மருத்துவ சேவை வாகனங்கள் (1962) ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக மேலும் 2 நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் தொடங்கப்பட்டு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களை தலைமை இடமாக கொண்டு செயல்பட உள்ளது.

அத்துடன் கால்நடை மருத்துவ வாகனங்களில் ஒரு கால்நடை மருத்துவர். ஒரு கால்நடை உதவியாளர், ஒரு ஓட்டுநர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்த மருத்துவ வாகனங்கள் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராமங்களில் கால்நடை மருத்துவ சிகிச்சை பணிகள் மற்றும் கருவூட்டல் பணிகளை மேற்கொள்ளவும், பிற்பகலில் கால்சென்டர் மூலம் பெறப்படும் அவசர சிகிச்சை பணிகளை மேற்கொள்ளவும் உள்ளது.

நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தியில் சிறு அறுவை சிகிச்சை செய்யும் வகையில் அறுவை சிகிச்சை உபகரணங்கள், இரத்த மாதிரிகளை ஆய்வு செய்ய நுண்ணோக்கி தடுப்பூசிகளை முறையாக பராமரிக்க குளிர்சாதனப்பெட்டி, சினை ஊசிகளை பராமரிக்க திரவ நைட்ரஜன் குடுவை, மலடு நீக்க சிகிச்சை மருந்துகள், ஆண்மை நீக்கம் உபகரணங்கள், பாம்புகடி எதிர்வினை மருந்துகள், கால்நடை மருந்துகள், குடற்புழு நீக்க மருந்துகள் போன்ற கால்நடை மருந்தகத்தில் இருக்கும் அத்தனை வசதிகளுடனும் கால்நடை நடமாடும் மருத்துவ ஊர்தி செயல்பட உள்ளது. அவசர சிகிச்சை தேவைப்படுவோர் 1962 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிற்கு தகவல் தர வேண்டும். தகவல் பெறும்பட்சத்தில் வீடுதேடி வந்து கால்நடைகளுக்கு சிகிச்சை வழங்கப்படும். எனவே, கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படுவோர் அரசின் சேவைகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இயக்குநர் பொன்னம்பலம், உதவி இயக்குநர் வேங்கட லட்சுமி, உதவி மருத்துவர் மதன்குமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வளர்ச்சி திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக்கூட்டம்



**திருவண்ணாமலை, மார்ச் 2–**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் தலைமையில் திருவண்ணாமலை, செங்கம், புதுப்பாளையம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்டத்தில் உள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் திருவண்ணாமலை, செங்கம் மற்றும் புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் அலுவலகத்தில் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும், துறை அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்தும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களான கலைஞரின் கனவு இல்லம், ஊரக குடியிருப்பு பழுது நீக்கம் செய்யும் திட்டம், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம், இலங்கைத் தமிழர்கள் வீடுகட்டும் திட்டம் மற்றும் பிரதம மந்திரி ஜன்மன் திட்டத்தில் வீடு கட்டும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், தூய்மை பாரத இயக்கத் திட்டம், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், பள்ளி உட்கட்டமைப்பு மேம் பாட்டுத் திட்டம், அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட அனைத்து திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஊராட்சிகள் வாரியாக ஆய்வு மேற்கொண்டு, பணிகளை குறித்த காலத்திற்குள் விரைந்து முடிக்க துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் எஸ்சிபிஆர் திட்டத்தின் கீழ் ரூபாய் 5 கோடியே 90 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தின் கட்டுமான பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைவாகவும் தரமாகவும் முடிக்க துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) கிருஷ்ணன், செயற்பொறியாளர் இளங்கோ, திருவண்ணாமலை உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சையத் அகமது பயாஸ், உதவி திட்ட அலுவலர்கள், திருவண்ணாமலை, செங்கம், புதுப்பாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு துறைசார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007

# பிளஸ்2 பொதுத்தேர்வு நாளை தொடங்குகிறது

# உக்ரைனுக்கு ராணுவ உதவிகளை நிறுத்த அமெரிக்கா அதிரடி முடிவு

# என்னுடைய கண்ணீர் சீமானை சும்மா விடாது-நடிகை விஜயலட்சுமி




# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 2-3-2025 ஞாயிற்றுக்கிழமை •பக்கம் 8 • ரூ.600 காசுகள்